**பாடம் 2** **ஜனவரி 3-9**

# ஸ்தோத்தரிக்கவும் ஜெபிக்கவும் காரணங்கள்



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** பிலி 1:1–18; 1கொரி 13:1–8; எரே 17:9; கொலோ 1:1–12; 1பேதுரு 1:4; சங் 119:105; ஏசா 30:21.

**மனன வசனம்:** உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று (நம்புகிறேன்). பிலிப்பியர் 1:5.

பவுல் காரணத்தோடுதான் தன் நிருபங்களை வாழ்த்துதலோடும் ஸ்தோத்திரத்தோடும் துவங்குகிறார். நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்(துகிறோம்). கொலோ 1:2,5.

பவுலைப்போல நாமும் தேவனை ஸ்தோத்தரிக்க பல காரணங்கள் உள்ளன. தூதர்களாலும் புரிந்துகொள்ளமுடியாத வழிகளில் தேவகிருபையை அனுபவித்திருக்கிறோம். தேவனுடைய ஈவான சமாதானமும் அப்படிப்பட்டதே; தேவனுக்கு இணங்குவதாலும், தேவ அன்பால் உண்டாகிற நம்பிக்கையாலும் அது கிடைக்கிறது.

மனிதர்கள் மற்றவர்களைப் பாராட்டலாம், அவர்களுக்கு தாங்கள் செய்த நன்மைகளுக்காக அவர்கள் தங்களைப் பாராட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கலாம். தங்கள் பிள்ளைகள் தேவனிடம் அன்பாயிருக்க வேண்டுமென்றும், அவர்களை வளர்ப்பதற்கு தாங்கள் செய்த தியாகங்களை எப்போதாவது உணர்ந்துகொள்ளவேண்டுமென்றும் பெற்றோர் ஜெபிக்கிறார்கள். ஆனால், மனிதர்களாக நாம் பல தவறுகளைச் செய்கிறோம். அவற்றிலிருந்து கற்றுக்கொள்கிறோம்; அல்லது கற்றுக்கொள்ள வேண்டும்.

பிலிப்பியர், கொலோசெயர் நிருபங்களில் பவுல் ஸ்தோத்திரத்தோடும் ஜெபத்தோடும் துவங்குகிற அந்த வார்த்தைகளை இந்த வாரம் ஆராய்வோம்; நம்முடைய ஜெப வாழ்க்கையை ஊக்குவித்து, பெலப்படுத்த அது உதவும்.

*2026, ஜனவரி 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சுவிசேஷத்தில் உடன்பாடு

**பிலி 1:3-8இல், பவுல் எதற்காக ஸ்தோத்திரம் செலுத்துகிறார்? பிலிப்பிய விசுவாசிகளுக்கு என்ன நிச்சயத்தைக் கொடுக்கிறார்? அது ஏன் முக்கியமானது?**

பிலிப்பி சபையை பவுல் ஸ்தாபித்தார்; அதனால் அந்த நிருபம் முழுவதிலும் கிறிஸ்தவ ஐக்கியம் பரவிக்கிடப்பதை நாம் பார்க்கலாம். நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சிறையிலிருந்த பவுல், தன் சபையையும் சபை அங்கத்தினர்களையும் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தார்; 'இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே' அவர்கள்மீது வாஞ்சையுடன் இருந்தார். பிலி 1:8. அவர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். பவுல் ஸ்தோத்திரம் செலுத்தி ஜெபித்த செயலானது, பரலோகத்தில் இயேசு நமக்காகப் பரிந்துபேசுவதை நினைவுபடுத்துகிறது.

பிரதான ஆசாரியனுடைய மார்க்கவசத்தில், இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைக் குறிப்பிடுகிற 12 கற்கள் இருந்தன. மக்களை தன் 'இருதயத்தின்மேல்' வைத்து, அவர்களுக்காக அவன் பரிந்துபேசவேண்டும். யாத் 28:29. பரலோகப் பரிசுத்தஸ்தலத்தில் நம் பிரதான ஆசாரியனாகிய இயேசு, தம் மக்களுடைய நாமங்களைச் சுமந்தவராக பிதாவுக்கு முன்பாக நிற்கிறார்.

பிலி 1:6 இல் உள்ள வார்த்தைகள் சற்றே தெளிவற்றவையாக உள்ளன; ஆனால், அவை பவுலுக்கும் பிலிப்பியர்களுக்கும் இடையிலிருந்த நெருங்கிய உறவை வலியுறுத்துகின்றன. பவுல் அவர்களை ஜெபத்தில் நினைவுகூருவதாக இங்கே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; ஆனால் பிலிப்பியர் அவரை நினைவுகூருவதாகவும் மொழிபெயர்க்கலாம். அத்தகைய பரஸ்பர உறவு காணப்பட்டது, அதைத்தான் 'உடன்பட்டவர்கள்' அதாவது, **கொய்னோனியா** எனும் கிரேக்க வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவின் பாடுகளில் பவுல் பங்கெடுத்ததுபோல, பிலிப்பியர்கள் பவுலின் பாடுகளில் 'உடன்பட்டார்கள்'; பவுலின் ஊழியத்திற்கு பண உதவி செய்தார்கள். பிலி 3:10; 4:14,15. அத்தகைய பரஸ்பர உறவு 'முதல் நாளிலிருந்து அன்றுவரை' காணப்பட்டதால், பவுல் அவர்களுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறார். பிலி 1:3. அவர்களுக்காக 'சந்தோஷத்தோடே' விண்ணப்பம்பண்ணுகிறார். பிலி 1:4.

தன் சிறைச்சாலை சூழலை நேர்மறையாக விவரிக்கிறார்; 'சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லவும்', 'அதைத் திடப்படுத்துவதற்கும்' உதவுவதாகக் குறிப்பிடுகிறார். பிலி 1:7. இந்த இரண்டு வார்த்தைகளும் சட்டரீதியானவை; எனவே அவர் சீக்கிரத்தில் விசாரிக்கப்படவிருந்ததையும், வீரர்களிடமும் தன்னைப் பார்க்க வந்தவர்களிடமும் அவர் சுவிசேஷத்தைச் சொல்லி வந்ததையும் அவை காட்டுகின்றன. சுவிசேஷத்தை எதிர்ப்பவர்களுக்கு உத்தரவு சொல்லுவதும், அதன் நித்திய நியதிகளை உறுதிப்படுத்துவதும் இன்றியமையாதவை. தன் எதிர்காலத்தைவிட, சுவிசேஷத்தின் மெய்த்தன்மையை நிரூபித்தல் முக்கியமென்று பவுல் நினைத்தார். தான் மரித்தாலும், தம்மை நம்புகிற அனைவரிலும் தேவன் தொடங்கின 'நற்கிரியையை' அவரே இறுதிவரை நடத்துவாரென நம்பினார். பிலி 1:5.

---

**தேவன் 'தொடங்கின நற்கிரியை' இறுதிவரை நிறைவேற்றுவார் என்கிற வாக்குறுதியை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? பிலி 1:6. இந்த வேலை இரண்டாம் வருகைக்குமுன் முடிவடையுமா?**

# பவுலின் ஜெப வேண்டுகோள்கள்

சில வருடங்களுக்குமுன், தன்னையும் தன் தேவைகளையும் தன் ஆசைகளையும் சுற்றியே தன் ஜெபங்கள் இருப்பதாக ஒரு போதகர் சொன்னதைக் கேட்டேன். அவற்றை 'சுயநல சிறு ஜெபங்கள்' என்று சொன்னார்; ஆனால் தேவனோ நம்மைக்குறித்த பெரிய திட்டங்களை வைத்திருக்கிறார்.

**பிலி 1:9-11இல் பவுல் ஏறெடுக்கிற ஜெபத்தின் முக்கிய நோக்கம் என்ன? அவர் வைக்கிற முக்கிய வேண்டுகோள்கள் யாவை? ஜெபம்பற்றி என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?**

---

கிரேக்க மொழியில் நாற்பத்துமூன்று வார்த்தைகள் கொண்டதாக இந்த ஜெபம் உள்ளது; பவுலின் அக்கறை முழுவதையும் உள்ளடக்கியுள்ளது; அதைதான் தன் நிருபத்தின் மீதிப்பகுதியில் பவுல் விளக்குகிறார்: அதாவது அன்பு, அறிவு, பகுத்தறிவு, உண்மை, தீங்குசெய்யாமை, இயேசு கிறிஸ்துவின்மூலம் கிடைக்கிற நீதி ஆகியவைகுறித்துப் பேசுகிறார். சபை முழுவதையும் மனதில் வைத்தே பவுல் இந்த ஜெபத்தையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுத்தார். பவுலின் ஜெபங்கள் பிறர் நன்மைக்கானவை; ஒட்டுமொத்த சபைக்காக, அதன் நன்மைக்காக ஜெபித்தார். அந்த ஜெபத்தின் தனிப்பட்ட அம்சங்கள் சிலவற்றை உன்னிப்பாக ஆராய்வோம்:

அன்பு அதிகமதிகமாய்ப் பெருகவேண்டியிருந்தது; அன்பு பெருகவேண்டும் என்று மட்டுல்ல, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பெருகவேண்டும் என்று ஜெபிக்கிறார். அன்பானது 'அறிவிலும் எல்லா உணர்விலும்' பெருகவேண்டும். பிலி 1:9. இங்கே அவர் தகவல் அறிவைமட்டும் சொல்லவில்லை; தேவனோடு ஐக்கியமாவதாலும், அவரது வார்த்தையை ஆராய்வதாலும் கிடைக்கிற ஆவிக்குரிய அறிவையும் குறிப்பிடுகிறார். எபே 1:17; 4:13; 1தீமோ 2:4.

உணர்வு என்பது புரிந்துகொள்ளுதல். 'உத்தமமானவைகளை ஒப்புக்கொள்ள' உதவுகிற புரிதலே இந்த உணர்வு என்கிறார் பவுல். தீங்கானவற்றிலிருந்து ஒழுக்கரீதியாக வேறுபட்டு நிற்க இது உதவுகிறது; 'துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாக' நாம் மாற உதவுகிறது. பிலி 1:11.

துப்புரவு என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'சூரிய வெளிச்சத்தால் நியாயந்தீர்க்கப்படல்' என்று அர்த்தம்; கறைபடாத சுத்தமான செயலைச் சுட்டிக்காட்டுகிறது: அதாவது, 'கிறிஸ்தவர்கள் செய்கிற அனைத்தும் சூரியவெளிச்சம்போல தெள்ளத்தெளிவாக இருக்கவேண்டும்.'

இடறலற்றவர்கள் என்றால், தடைக்கல்லாக இல்லாமல் இருப்பது. இன்னொருவர் தேவன்மேல் நம்பிக்கை வைப்பதைக் கடினமாக்குகிற எதையும் சொல்லாமல் அல்லது செய்யாமல் இருப்பது.

இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதி. இந்தக் கருத்துபற்றி ரோமரிலும் கலாத்தியரிலும் பவுல் விளக்கமாகப் பேசுகிறார்; அதையே பிலிப்பியர் 3இலும் தொடர்கிறார். நம்மிடம் நீதி எதுவுமில்லை; கிறிஸ்துவிடமிருந்து பெறுகிற நீதிமட்டுமே உள்ளது.

---

**நாம் செய்கிறது எதுவாக இருந்தாலும், நம் அன்பு எவ்வாறு 'இன்னும் அதிகமதிகமாய்ப் பெருக' முடியும்? பிலி 1:9. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அது ஏன் மிகவும் முக்கியமானது? 1கொரி 13:1-8.**

# ஆவிக்குரிய பகுத்தறிவின்படி செயல்படுதல்

பவுல் சிறையில் அடைக்கப்பட்டதைக் கேட்டதும் பிலிப்பி விசுவாசிகள் கலக்கமடைந்தார்கள். முன்புபோல அவர் பணிசெய்ய முடியவில்லை; அவரால் பயணிக்க முடியவில்லை; பிரசங்கிக்கமுடியவில்லை. ஜெபாலயங்களுக்குச் சென்று, இயேசுவே மேசியா என்று மக்களுக்குப் போதிக்க முடியவில்லை. தொடர்ந்து சபைகளை ஸ்தாபிக்க முடியவில்லை. அப்போஸ்தலரின் நிலையை அறியவும், அவரை ஊக்குவிக்கவும், அவரது சரீர தேவைகளைச் சந்திக்கவும் பிலிப்பிய விசுவாசிகள் எப்பாப்பிரோதீத்துவை அனுப்பி வைத்தார்கள்.

**தன் சிறையிருப்பை பவுல் எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தார்? பிலி 1:12-18. தான் சந்தித்த சூழ்நிலைகள் மத்தியிலும் பவுலுக்கிருந்த மனநிலையிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

---

பவுல் சொல்லியனுப்பிய செய்தியால் பிலிப்பியர் ஆச்சரியப்பட்டிருப்பார்கள். பவுல் தன் சூழ்நிலைகளை வித்தியாசமான கண்களால் பார்த்தார். தனக்கு நேரிட்ட சூழ்நிலை தனக்கு நன்மையென ஆவிக்குரிய பகுத்தறிவில் கண்டார். அது அவரது பணியைத் தடைசெய்யவில்லை; மாறாக, 'சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று'. பிலி 1:12. கட்டுகளும் சிறைக்கம்பிகளும்மட்டுமே மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், ரோமப் பாதுகாவலர்கள் எல்லோரையும் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆத்துமாக்களாக பவுல் பார்த்தார். தன் சிறையிருப்பால் மற்ற விசுவாசிகள் அதிகம் செயல்பட்டார்கள்; சுவிசேஷத்தை அறிவிக்க அதிக உறுதிகொண்டார்கள்; விளைவுகளை எண்ணிப் பயப்படாமல் கிறிஸ்துவுக்காக தைரியமாகப் பேசினார்கள். இவற்றைத்தான் பவுல் பார்த்தார்.

ஆனால் சிலர் பவுலின் சிறையிருப்பை தங்கள் நலனுக்குப் பயன்படுத்த விரும்பினது தெரிகிறது. பவுல் சிறையில் அடைக்கப்பட்டதால், தங்கள்மீதும், தாங்கள் அறிவிக்கிற சுவிசேஷத்தின்மீதும் இனி மற்றவர்கள் கவனம் திரும்புமென்று எண்ணினார்கள். திருச்சபையிலும் சுயநலம் காணப்படுவதற்கு வருத்தமான உதாரணம் இது. பவுலுக்கு வெகுகாலத்திற்கு முன்னரே எரேமியா இவ்வாறு சொன்னார்: 'எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?' எரே 17:9.

நல்லவேளையாக, உண்மையுள்ள சில ஊழியர்கள் இருந்தார்கள்; சுவிசேஷத்தைப் பரப்ப அவர்கள் அதிக வைராக்கியம் கொண்டார்கள். பவுலின்மீது அவர்கள் அதிக அன்பு வைத்திருந்ததால், விசுவாசத்தின்நிமித்தம் அவர் அனுபவித்த பாடுகளைப் பார்த்து, ஆண்டவருக்காக அதிகம் வேலைசெய்யத் தொடங்கினார்கள். முன்பு செல்வதற்குப் பயந்த இடங்களுக்குச் சென்றார்கள்; முன்பு அமைதியாக இருந்த சூழ்நிலைகளில் இப்போது பேசினார்கள்; அதனால், அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், இரட்சிப்பின் சுவிசேஷம் பரவவும் ஏதுவாயிற்று.

---

**மிகவும் கஷ்டமான அனுபவங்களிலிருந்து நீங்கள் சில நன்மைகளைப் பெற்றிருக்கலாம். அந்த அனுபவங்களிலிருந்து என்ன பாடத்தைக் கற்றுக்கொண்டீர்கள்? சில சமயங்களில் அந்த நன்மை நமக்குப் புரியாமல் இருந்தாலும், தேவனை நம்புவதற்கு நாம் என்ன செய்யலாம்?**

# சுவிசேஷக் கனி

பவுலுக்கு கொலோசெய விசுவாசிகளோடு இருந்த உறவுக்கும், பிலிப்பிய விசுவாசிகளோடு இருந்த உறவுக்கும் வித்தியாசமிருக்கிறது. 'சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிறவர்கள்' என்று கொலோசெயரைக் குறிப்பிடுகிறார். கொலோ 2:1. ஆனாலும் பிலிப்பிய விசுவாசிகளுக்கு நிச்சயமூட்டிப் பேசியது போல, அவர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். அவர்களுக்காக எப்பொழுதும் தேவனிடம் விண்ணப்பம்பண்ணுகிறார்.

**எந்த மூன்று காரியங்களுக்காக தேவனை பவுல் ஸ்தோத்தரிக்கிறார்? கொலோ 1:3-8.**

மற்ற இடங்களில் தான் குறிப்பிடுகிற அந்த மூன்று நற்பண்புகளை மீண்டும் சொல்கிறார்: விசுவாசம், நம்பிக்கை, அன்பு. 1கொரி 13:13; 1தெச 1:3; 5:8. அந்த நற்பண்புகள் கொலோசெயர்களால் உண்டானதாக அல்ல, தேவனே கொடுத்ததாகச் சொல்கிறார். யாக்கோபு சொல்வதுபோல், நாம் அவரிட மிருந்து பெறுகிற 'நன்மையான, பூரணமான' வரங்களில் அவையும் அடங்கும். யாக் 1:17. தேவன் நம்மீது வைத்திருக்கிற அன்பை அறியும்போது, கிறிஸ்துமேல் நாம் விசுவாசம் வைக்கிறோம். எபே 2:4-8. மேலும், பரலோக நம்பிக்கையையும் பெறுகிறோம். அது 'அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம்' என்றும், அது 'பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது' என்றும் பேதுரு சொல்கிறார். 1பேதுரு 1:4,5.

சுவிசேஷமானது 'சத்திய வசனத்தை' அடிப்படையாகக் கொண்டதால், அது நம்பிக்கைக்கு பாத்திரமானது என்கிறார் பவுல். தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனம்பற்றிப் பேசுகிற மற்ற இடங்களிலும் அவ்வாறே குறிப்பிடுகிறார். 2கொரி 6:7; 2தீமோ 2:15. அது 'மனுஷர் வசனம்போல்' அல்லாமல், விசுவாசிக்கிறவர்களில் 'பலன் தருகிறதாயிருக்கிறது.' 1தெச 2:13. மேலும், தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறது. ஏசா 55:11. எனவே சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது, அதைக் கேட்பவரின் இருதயங்களில் ஆவியானவர் செய்கிற கிரியை மூலம் தேவனுடைய வல்லமை வெளிப்படுகிறது. மக்கள் அதற்கு இணங்குகிறார்கள். சுவிசேஷமானது 'ஜீவ வசனமாக' இருப்பதால், அது கனி கொடுக்கிறது. பிலி 2:14.

குறுகிய காலத்தில் சுவிசேஷம் வெகு வேகமாகப் பரவியது. கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து முப்பது வருடங்களுக்குள்ளாக, சுவிசேஷம் 'உலகமெங்கும்' பரவியதாக பவுலால் சொல்லமுடிந்தது. கொலோ 1:6. அதே அதிகாரத்தின் பின்பகுதியில், 'வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது' என்கிறார். கொலோ 1:23. ரோமர்களின் நெடுஞ்சாலைகள்தாம் வேகமான தகவல்தொடர்பையும் பயணத்தையும் சாத்தியமாக்கியன; அவ்வாறுதான் பவுலின் நிருபங்கள் பல இடங்களுக்கும் விரைவாகப் பரவியிருக்கவேண்டும். ஆனாலும் வசனத்தின்மூலம் கிரியைசெய்த தேவ வல்லமைதான் ஒரு நபரில் ஆவிக்குரிய வாழ்வைப் பிறக்கச்செய்கிறது. யாக் 1:18; 1பேதுரு 1:23, அவர்களை கிறிஸ்துவுக்குள் புதுச்சிருஷ்டியாக்குகிறது. 2கொரி 5:17.

---

**'பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கை' என்று கொலோ 1:5இல் பவுல் எழுதுகிறார். அந்த நம்பிக்கைபற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் உண்மையில் பாத்திரமற்றவராக இருந்தாலும், அது தனிப்பட்ட விதத்தில் உங்களுக்கு எவ்வாறு பொருந்தும்?**

# ஜெப வல்லமை

**பவுலின் ஜெபத்தில் காணப்படுகிற சிறப்பு வேண்டுதல்கள் யாவை? கொலோ 1:9-12.**

'அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட' வேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். தேவனுடைய சித்தத்தை அறிவதே ஞானம்; ஆவிக்குரிய விவேகம் என்கிறார். கொலோ 1:9. தேவனை முற்றிலும் நம்பி, நம் சுயபுத்தியைச் சாராமல், அவரது சித்தப்படி செய்ய ஆயத்தமாக இருக்கும்போது ஞானம் வருகிறது. நீதி 3:5. யோவான் 7:17. 'என்னைக்குறித்த தேவசித்தத்தை எவ்வாறு அறியலாம்?' என்கிற கேள்வி ஒரு சூழ்நிலையில் எழும்பலாம். தேவ சித்தத்தை அறிய ஜெபத்துடன் நாடும்போது, நான்கு முக்கிய ஆதாரங்களிலிருந்து அதை அறியலாம்:

1. ஞானத்திற்கான மிகமுக்கிய ஆதாரம் வேதாகமம். 'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.' சங் 119:105.
2. கடைசிக்காலத்திற்கான விசேஷித்த ஞானத்தை, எலன் ஒய்ட்டின் எழுத்துகளில் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். வெளி 12:17; வெளி 19:10. 'உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்' என்று வேதாகமம் நம்மை ஊக்குவிக்கிறது. 2நாளா 20:20.
3. வாசல்களைத் திறக்கவோ மூடவோ தேவனிடம் கேட்கும்போது, தேவ வழிநடத்துதலால் உருவாகிற சூழ்நிலைகள்மூலம் அவரது சித்தத்தையும் வழிகாட்டலையும் அறியலாம். கொலோ 4:4.
4. ஆவியானவரே நேரடியாகப் பேசி சொல்லலாம்; அவரது சத்தத்தைப் புரிந்துகொள்ளப் பழகியிருக்கவேண்டும்: 'நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.' ஏசா 30:21.

கொலோசெய விசுவாசிகள் கர்த்தருக்குப் 'பிரியமாய் நடந்துகொள்ள' பவுல் ஜெபிக்கிறார். கொலோ 1:10. இயல்பிலேயே எவரும் 'பாத்திரர்' இல்லை, ஆனால் தேவன் தம் கிருபையால் நம்மைப் பாத்திரவான்களாக எண்ணுகிறார்; அந்த உன்னதமான அழைப்பின்படி வாழுமாறு அழைக்கிறார். எபே 4:1; 1தெச 2:12. 'நட (சஞ்சரி)' என்று இந்த நிருபத்தில் மேலும் மூன்று இடங்களில் பேசுகிறார். கொலோ 2:6; 3:7; 4:5. அதற்கு தேவ சித்தப்படிச் செயல்படுவது என்று அர்த்தம். யாத் 18:20. அது பரிசுத்த ஆவியானவருடைய கிரியையால் மட்டுமே சாத்தியம். எசே 36:27.

நம்முடைய வாழ்க்கை கர்த்தருக்கு 'பிரியமுண்டாக' இருக்கவேண்டும் என்றும் ஜெபிக்கிறார்; பிறகு அவ்வாறு செயவதற்கான பல வழிகளைப் பட்டியலிடுகிறார்: 'சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தரவேண்டும்'; பிறகு, 'தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைய வேண்டும்; இறுதியாக, 'ஸ்தோத்தரிப்பதில்' பெருகவேண்டும். கொலோ 1:9,10,13.

---

**'ஏதாவது ஒரு திசையை நோக்கி தேவன் உங்களை நடத்துவதை நீங்கள் எவ்வாறு அறிகிறீர்கள்?' என்று யாராவது உங்களிடம் கேட்டால், என்ன பதில் சொல்வீர்கள்? ஏன்?**

# மேலும் படிக்க:

'எதிர்காலத்திற்கான உறுதியான திட்டங்களை பலரால் உருவாக்க முடியவில்லை. அவர்களுடைய வாழ்க்கை அமைதியற்றுக் காணப்படுகிறது. வாழ்க்கை விவகாரங்களின் விளைவைப் பகுத்தறிய முடிவதில்லை; அது பெரும்பாலும் அவர்களை பதற்றத்திற்கு ஆளாக்குகிறது. இந்த உலகில் தேவ பிள்ளைகளின் வாழ்க்கை ஒரு பயணியின் வாழ்க்கைக்கு ஒத்திருப்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். நம் சொந்த வாழ்க்கைகுறித்து திட்டமிட நமக்கு ஞானம் இல்லை. நமது எதிர்காலத்தைத் தீர்மானிப்பது நம் வேலையல்ல. 'விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்.' எபிரெயர் **11:8.**

கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, தமக்கென திட்டங்கள் எதையும் போடவில்லை. தமக்கான தேவதிட்டங்களை ஏற்றுக்கொண்டார்; ஒவ்வொரு நாளும் பிதா தம் திட்டங்களை அவருக்கு வெளிப்படுத்தினார். அப்படியே நாமும் தேவனைச் சார்ந்திருக்கவேண்டும்; நம் வாழ்க்கை அவருடைய சித்தத்தின்படி அமைந்ததாகக் காணப்படவேண்டும். நாம் நம் வழிகளை அவரிடம் ஒப்படைக்கும்போது, அவர் நம் நடைகளை நடத்துவார்.

பிரகாசமான எதிர்காலத்திற்குத் திட்டமிடுவதில், அநேகர் முழுத் தோல்வியைச் சந்திக்கிறார்கள். தேவன் உங்களுக்காகத் திட்டமிடட்டும். தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காக்கிறவரின் வழிநடத்துதலை சிறு குழந்தைபோல நம்பியிருங்கள். **1**சாமுவேல் **2:9.** தேவபிள்ளைகள் அவரது உடன் ஊழியர்கள். தேவநோக்கத்தின் மகிமையைப் பகுத்தறியவும், நடக்கப்போவதை ஆரம்பம்முதல் முடிவுவரை பார்க்கவும் அவர்களால் முடிந்தால், எந்தப் பாதையில் செல்ல அவர்கள் தீர்மானிப்பார்களோ, அதைத் தவிர வேறு வழியில் அவர்களை அவர் வழிடத்துவதே இல்லை.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கடந்த வாரத்தில் நிகழ்ந்தவற்றை யோசித்துப் பார்த்து, என்னென்ன விஷயங்களுக்காக ஸ்தோத்திரம் செலுத்தலாமெனப் பட்டியலிடுங்கள். நீங்கள் நினைப்பதைவிட அதிகமான விஷயங்களுக்கு நன்றிசெலுத்த வேண்டியதை உணருகிறீர்களா?*

2. *மேலுள்ள மேற்கோளின் கடைசி வரியில் எலன் ஒய்ட் சொல்வதுபோல ஆழமான விதத்தில் தேவனை நம்புவதற்கு என்ன செய்யலாம்?*

3. *கொலோ 1:6,23இன் வெளிச்சத்தில், பின்வரும் வாசகத்தைக் கலந்துரையாடுங்கள்: நாற்பது வருட அவநம்பிக்கையும், முறுமுறுப்பும், கலகமும் முற்கால இஸ்ரவேலரை கானான் தேசத்திற்குச் செல்லவிடாமல் செய்தது. அதே பாவங்கள்தாம் இக்கால இஸ்ரவேலரின் பரலோக கானானின் பிரவேசத்தைத் தாமதிக்க வைக்கிறது. இந்த இரண்டு சம்பவங்களிலும் தவறு தேவனுடைய வாக்குறுதிகளில் இல்லை. அவநம்பிக்கையும், உலகப்பற்றும், பரிசுத்தமற்ற நடத்தையும், தேவமக்களெனச் சொல்லிக்கொள்கிறவர்களுக்கு மத்தியிலான சச்சரவும்தான் பல வருடங்களாக நம்மை இந்தப் பாவ உலகிலும் துக்கத்திலும் வைத்துவருகிறது. கிறிஸ்துவின் திருச்சபையானது தேவன் அதற்கு நியமித்த கட்டளைகளைச் செய்திருந்தால், உலகம் முழுவதும் எச்சரிக்கப்பட்டிருக்கும், கர்த்தராகிய இயேசு நம் பூமிக்கு வல்லமையிலும் மகத்தான மகிமையிலும் வந்திருப்பார். இதே தவறுகளை எந்தெந்த வழிகளில் நாமும் இன்று செய்து வரலாம்?*

# தேவனுடைய தூதுவர்

கென்யாவில் ஒரு வீட்டின் வெளியே மூன்று நாய்கள் ஆஸ்கரைச் சூழ்ந்து, குரைத்துக் கொண்டிருந்தன. அந்த நாய்களை அவிழ்த்து விட்ட வீட்டுக்காரர், ஆஸ்கரிடம் வந்து, "நீ யார்?" என்று கேட்டார்.

"நான் தேவனுடைய தூதுவன்" என்று ஆஸ்கர் சொன்னான். "அவர் உன்னிடம் என்ன செய்தி சொல்லி அனுப்பினார்?" என்று கேட்டார். "அது தேவனுடைய செய்தி; நான் உள்ளே வரலாமா?" என்று ஆஸ்கர் கேட்டார். அந்த மனிதர் நாய்களைக் கட்டிப்போட்டார்.

வீட்டிற்குள் சென்றதும் ஆவலோடு ஆஸ்கரைப் பார்த்தார். "நாம் ஜெபிப்போம்" என்று ஆஸ்கர் சொன்னார்.

அந்த மனிதர் கண்களை மூடவில்லை. ஆஸ்கர் ஜெபித்துவிட்டு, வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். அந்த மனிதர் ஒரு கிறிஸ்தவர் கிடையாது. அவர் கிறிஸ்தவமல்லாத ஒரு மதத்தைச் சேர்ந்தவர். ஆனால் வேதம் எனப்படுகிற அந்தப் புத்தகங்கள்பற்றி அறிந்திருந்தார். பல கேள்விகளைக் கேட்டார். இருவரும் நண்பர்களானார்கள். இன்று அந்த மனிதரும் அவரது மனைவியும் செவந்த்–டே அட்வென்டிஸ்டுகளாக இருக்கிறார்கள்.

மற்றொரு சமயத்தில், இன்னொரு வீட்டுக்காரர், ஆஸ்கர் வேதபாடம் நடத்த முன்வந்தபோது ஆர்வமடைந்தார். 6,8,13 வயதான தன் மூன்று பிள்ளைகளையும் போகும்படிச் சொன்னார். அவர்கள் சென்றபோது, அவர்கள் வலியால் நொண்டி நடந்ததை ஆஸ்கர் கவனித்தார். "பிள்ளைகளை இங்கு வரச்சொல்லுங்கள், நாம் ஜெபிப்போம்" என்று சொன்னார். பிறகு அந்தப் பிள்ளைகளுடைய தோல்களின்கீழ் ஒரு வகை பூச்சி, முட்டையிட்டு இருந்ததைக் கண்டார்; அதுதான் வலியை ஏற்படுத்தியது. ஆஸ்கர் அந்தப் பிள்ளைகளுக்காக ஜெபித்துவிட்டு, மருந்து வாங்கச் சென்றார்.

அந்தப் பூச்சித்தொற்று மந்திரவாதத்தால் ஏற்பட்டதாக அந்தக் குடும்பத்தினர் எண்ணியிருந்தார்கள். ஆஸ்கர் திரும்பிவந்து, வீட்டையும், படுக்கையையும் சுத்தம் செய்ய உதவினார். பிள்ளைகளைக் குளிப்பாட்டி, மருந்துபோடுமாறு பெற்றோரிடம் கூறினார். ஆஸ்கர் மீண்டும் அந்தப் பிள்ளைகளுக்காக ஜெபித்தார், பெற்றோருக்கு வேதாகமத்தைச் சொல்லிக்கொடுத்தார். பிறகு, அந்தக் குடும்பத்தினர் அட்வென்டிஸ்டுகளாக மாறி, ஒரு புதிய அட்வென்டிஸ்ட் ஆலயம் கட்டுவதற்காக தங்கள் நிலத்தை விற்று பணம் கொடுத்தார்கள்.

ஒருசமயம், ஒரு சபைத்தலைவர் ஆராதனைக்கு வரும்படி ஆஸ்கரை அழைத்தார், பிறகு ஆஸ்கர் ஒரு அட்வென்டிஸ்ட் என்பதை அறிந்து, அவரைப் பேச அனுமதிக்கவில்லை. அந்த ஆராதனை முழுவதும் ஆஸ்கர் பங்குபெற்றார். அங்கிருந்து கிளம்பியபோது, பல அங்கத்தினர்கள் தனக்குத் தெரிந்தவர்களாக இருந்தபடியால், அவர்களிடம் சென்று நலம் விசாரித்தார். "வேதாகமம் ஒரு பெரிய சமுத்திரம் போன்றது, போதகர் வந்து உங்களுக்குப் போதிக்க வேண்டும் என்று காத்திருப்பதற்கு இது காலமல்ல. நீங்களே படிப்பதற்கான பாடங்கள் என்னிடம் உள்ளன" என்று கூறினார்.

ஏழு பேர் அந்த இடத்திலேயே வாய்ஸ் ஆஃப் பிராபஸி கண்டுகொண்டேன் வேதப்பாடங்களை வாங்கிக்கொண்டார்கள். மற்றவர்கள் தயங்கினாலும், பிறகு வாங்கிக்கொண்டார்கள். இன்று, அந்தச் சபையைச் சேர்ந்த 43 பேர் ஆஸ்கரிடம் வேதாகமத்தைக் கற்றுவருகிறார்கள்.